**தேனி மாவட்டம்,**
**குடிமராமத்து திட்டத்தின் கீழ்**
**ரூ.47.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்மாய்களை சீரமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-**

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், மயிலாடும்பாறை கிராமத்திற்குட்பட்ட செங்குளம் கண்மாய், கடம்பன்குளம் கண்மாய், பெரியகுளம் கண்மாய், கெங்கன்குளம் கண்மாய் ஆகிய கண்மாய்கள் பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) சார்பில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் ரூ.47.30 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் (05.09.2019) நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**ஆய்வுக்குப்பின் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,**

தமிழக அரசு தமிழகத்தில் வறட்சியை எதிர்கொள்ளவும், நீர்வள ஆதாரங்களை மேலாண்மை செய்திடவும் விவசாயிகளின் பங்களிப்புடன் நீர் நிலைகளை புனரமைக்கும் பண்டைய குடிமராமத்து திட்டத்தினை செயல்படுத்திட உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள குளங்களில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் வரத்து வாய்க்கால் மற்றும் கால்வாய்கள், ஏரிகள், மதகுகள் மற்றும் பிற நீர்நிலைகள் ஆகியவற்றை புனரமைத்தல், பலப்படுத்துதல் மற்றும் கலிங்குகள், மதகுகளை மறுகட்டுமானம் செய்தல், நீர்வழிகளில் அடைத்திருக்கும் செடிகளை அகற்றுதல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆண்டிபட்டி வட்டம், மயிலாடும்பாறை கிராமத்திற்குட்பட்ட செங்குளம் கண்மாயின் கரை 823 மீட்டர் நீளத்திலும், 48.41 ஏக்கர் நீர்பிடிப்பு பரப்பளவும், 24.36 மி.கன அடி கொள்ளவும், கலிங்குகள் மற்றும் மடை தலா 1 எண்ணிக்கையில் கண்மாய் அமைந்துள்ளது. குடிமராமத்து திட்டத்தின் கீழ் இக்கண்மாய் முட்செடிகளை அகற்றி, தூர்வாரி, கரைகளை பலப்படுத்தும் பணி, மடையில் சட்டர் மற்றும் கலுங்கு மராமத்துப்பணி, சிமிண்ட் எல்லைக் கற்கள் அமைத்து அளவீடு செய்யும் பணி, ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றி தண்ணீர் முழு கொள்ளவு தேங்கிட வழிவகை செய்யும் பணி ஆகிய பணிகள் ரூ.16.70 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது. கண்மாயின் மூலம் பாசனவசதி பெறும் 26.64 ஹெக்டர் (65.80 ஏக்கர்) நிலங்கள் பாசன வசதி உறுதிப்படுத்தப்படும்.

கடம்பன்குளம் கண்மாயின் கரை 960 மீட்டர் நீளத்திலும், 29.12 ஏக்கர் நீர்பிடிப்பு பரப்பளவும், 5.72 மி.கன அடி கொள்ளவும், 1 கலிங்கு, 2 மடைகள் எண்ணிக்கையில் கண்மாய் அமைந்துள்ளது. குடிமராமத்து திட்டத்தின் கீழ் இக்கண்மாய் முட்செடிகளை அகற்றி, தூர்வாரி, கரைகளை பலப்படுத்துதல், கரை பலவீனமான இடத்தில் உள்புறம் தடுப்புச்சுவர் அமைக்கும் பணி, கலுங்கு மராமத்துப்பணி, கொங்கரேவு அணைக்கட்டிலிருந்து வரும் கால்வாயில் தண்ணீர் பிரிக்கும் பகுதியில் சுவர் அமைக்கும் பணி, சிமிண்ட் எல்லைக் கற்கள் அமைத்து அளவீடு செய்யும் பணி, ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றி தண்ணீர் முழு கொள்ளவு தேங்கிட வழிவகை செய்யும் பணி ஆகிய பணிகள் ரூ.14.40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது. கண்மாயின் மூலம் பாசனவசதி பெறும் 20.50 ஹெக்டர் (51.50 ஏக்கர்) நிலங்கள் பாசன வசதி உறுதிப்படுத்தப்படும்.

பெரியகுளம் கண்மாயின் கரை 850 மீட்டர் நீளத்திலும், 73.61 ஏக்கர் நீர்பிடிப்பு பரப்பளவும், 22.88 மி.கன அடி கொள்ளவும், 2 கலிங்குகள், 3 மடைகள் எண்ணிக்கையில் கண்மாய் அமைந்துள்ளது. குடிமராமத்து திட்டத்தின் கீழ் இக்கண்மாயினை தூர்வாரி, கரை முடியும் வரை பலப்படுத்தும் பணி, சிமிண்ட் எல்லைக் கற்கள் அமைத்து அளவீடு செய்யும் பணி, ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றி தண்ணீர் முழு கொள்ளவு தேங்கிட வழிவகை செய்யும் பணி ஆகிய பணிகள் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது. கண்மாயின் மூலம் பாசனவசதி பெறும் 66.36 ஹெக்டர் (163.91 ஏக்கர்) நிலங்கள் பாசன வசதி உறுதிப்படுத்தப்படும்.

கெங்கன் கண்மாயின் கரை 634 மீட்டர் நீளத்திலும், 73.61 ஏக்கர் நீர்பிடிப்பு பரப்பளவும், 3.91 மி.கன அடி கொள்ளவும், தலா 1 கலிங்கு, 1 மடை எண்ணிக்கையில் கண்மாய் அமைந்துள்ளது. குடிமராமத்து திட்டத்தின் கீழ் இக்கண்மாயினை தூர்வாரி, கரை பலப்படுத்தும் பணி, சிமிண்ட் எல்லைக் கற்கள் அமைத்து அளவீடு செய்யும் பணி, ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றி தண்ணீர் முழு கொள்ளவு தேங்கிட வழிவகை செய்யும் பணி ஆகிய பணிகள் ரூ.6.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது. கண்மாய்யின் மூலம் பாசனவசதி பெறும் 28.30 ஹெக்டர் (69.90 ஏக்கர்) நிலங்கள் பாசன வசதி உறுதிப்படுத்தப்படும்.

இப்பணிகள் மேற்கொள்வதன் மூலம் கால்வாயில் தண்ணீர் தங்குதடையின்றி சென்று கண்மாயை விரைந்து அடையும். வெள்ளக்காலங்களில் வாய்க்கால் மற்றும் கண்மாயில் உடைப்பு ஏற்படாமல் இருப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து குடிநீர் தேவை மற்றும் கால்நடைகளுக்கு தேவையான தண்ணீர் தங்குதடையின்றி கிடைத்திட வழிவகை செய்யப்படும் என தெரிவித்தார்.

ஆய்வின்போது நீரினைப்பயன்படுத்துவோர் சங்கங்களின் உறுப்பினர்களிடம் இப்பணி தன்மை குறித்தும், குடிமராமத்து திட்டப்பணிகளை சிறப்பான முறையில் பணிகள் மேற்கொள்ளுவது குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டார்.

ஆய்வின்போது, பொதுப்பணித்துறை (நீர்வள ஆதாரஅமைப்பு) செயற்பொறியாளர் சுந்தரப்பன், பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் சி.ஜெயப்பிரித்தா, உதவி செயற்பொறியாளர் கார்த்திகேயன், உதவிப்பொறியாளர் கணேஷன், ஆண்டிபட்டி வட்டாடசியர் சந்திரசேகர் மற்றும் விவசாயிகள் உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**